1993 ஏப்ரல் 7]

அந்த சிங்கிள் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் தெரிவித்தவுடனேயே உடனுக்குடன் இங்கே இன்று சொன்னால் நாளைக் காலையில் அந்தப் பேருந்துகள் அங்கே இயக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 267, திருமதி ரெ. சியாமளா, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

267—

கோவில்பட்டியிலிருந்து சென்னை, கோயம்புத்தூருக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடுதல்

*16294— திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டியிலிருந்து சென்னைக்கும், கோயம்புத்தூருக்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் புதிதாக இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : போக்குவரத்துத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கோவில்பட்டியிலிருந்து சென்னைக்கு இரண்டு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. கோவில்பட்டியிலிருந்து கோயம்புத்தூருக்கு நேரடியாக பேருந்துகள் இயக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி தொழிற்சாலைகள் அதிகம் நிறைந்த நகரம் ஆகும். தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள நகரம் ஆகும். கோவில்பட்டிக்கும் மற்ற அனைத்து நகரங்களுக்கும் குறிப்பாக கோவை, சென்னை போன்ற நகரங்களுக்கு அதிக வியாபார தொடர்புள்ளதால் எண்ணற்ற பயணிகள் தினமும் மேற்படி சென்னை, கோவை நகரங்களுக்கு அடிக்கடி பயணம் செய்கிறார்கள். எனவே, கோவில்பட்டியிலிருந்து நேரடியாக கோவைக்கு பஸ் இயக்க அரசு ஆவன செய்யுமா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக பேருந்துகள் இயக்கப்படுகிறது. அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப் போல் திருநெல்வேலியிலிருந்து கோவைக்கு கோவில்பட்டி வழியாக 10 பேருந்துகள் ஒருநாளைக்கு 20 முறை அங்கே செல்லுகின்ற காரணத்தால் கோவில்பட்டியிலிருந்து நேரடியாக கோவைக்கு பேருந்து போடத் தேவையில்லை என்ற காரணத்தால் இந்தக் குறிப்பை நான் இங்கே குறிப்பிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி.பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஊரிலிருந்து சென்னைக்கும், கோவைக்கும் நெடுந்தூர பஸ்கள் விடுகின்றபோது அதே வழித்தடத்தில் ஆம்னி பஸ்உரிமையாளர்கள் தங்கள் பஸ்களில் வீடியோ போன்ற இயந்திரங்களைப் பொருத்தி சொகுசு பஸ்களை விடுகிறார்கள். இப்படிப்பட்ட நேரத்தில் அரசு பேருந்துகளில் கூட்டம் குறைவாக வருகிறது. இதைப் போக்குகின்ற வகையில் இப்படிப்பட்ட நெடுந்தூர பஸ்களில் வீடியோ இயந்திரங்களைப் பொருத்துகின்ற திட்டம் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒரு குறிப்பிட்ட ஊருக்கு பஸ் விடுவது பற்றிய பிரச்சினை. ஆகவே தனிக் கேள்வி போடவும்.

வினா எண். 268, திரு. கே. பி. ராஜு, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

268—

கோயம்புத்தூரில் அரசு நூல் ஆலை அமைத்தல்.

*14979—திரு. கே. பி. ராஜு :

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் அரசு நூல்ஆலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.